


தஞ்சை ஸ்ரீகாமாட்சி மெடிக்கல் சென்டரில்

# மயக்கவியல்துறை கருத்தரங்கு

தஞ்சாவூர், ஜூலை.27-

ஒவ்வொரு ஆண்டும் இந்திய மயக்கவியல் மருத்துவர்களின் கூட்டமைப்பின் தமிழக கிளை மயக்கவியல் மருத்துவர்களுக்கான பிரத்தியேக மாநாட்டை நடத்தி வருகிறது. அதன் ஒரு அங்கமாக தஞ்சையில் இந்த மாநாடு நடைபெற்றது. இதனை கருத்தில் கொண்டு தஞ்சை ஸ்ரீகாமாட்சி மெடிக்கல் சென்டரில் மயக்கவியல் துறை சார்ந்த மெக்கானிக்கல் வென்டிலேட்டர் கருத்தரங்கு நடந்தது. கருத்தரங்கில மருத்துவமனையின் மூத்த மற்றும் தலைமை மயக்கவியல் டாக்டர் வசந்தகுமார் வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக கோயம்புத்தூர் ராயல்கேர் மருத்துவமனை மயக்கவியல் மற்றும் சிறப்பு தீவிர சிகிச்சை பிரிவு தலைவர் டாக்டர் சிவகுமார், மற்றும் கொலம்பியா ஆசியா மருத்துவமனை (மணிபால் மருத்துவமனை பிரிவு குழுமம், பெங்களூரு) மயக்கவியல் மற்றும் சிறப்பு தீவிர சிகிச்சை பிரிவு தலைவர் டாக்டர் பிரதீப் ரெங்கப்பா ஆகியோர் குத்துவிளக்கேற்றி கருத்தரங்கை தொடங்கி வைத்தனர். ஸ்ரீகாமாட்சி மெடிக்கல் சென்டரின் துணை நிர்வாக இயக்குனர் டாக்டர் அக்சயா இனியன், மூத்த ஆலோசகர் டாக்டர் மோகன் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் நவீன கருவிகளை கொண்டு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. கருத்தரங்கில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட மயக்கவியல் மருத்துவ வல்லு னர்கள் கலந்துகொண்டனர். முடிவில் மயக்கவியல் துறையின் துணைத்தலைவர் நந்த மார் நன்றி கூறினார்.